## கீழக்கரை நகர்மன்ற 15.06.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

### பொருள் :1

இந்நகராட்சி வார்டு எண் 1 முதல் 21 வரையிலான பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மூலம் 99 பணியாளர்களை கொண்டு முதல்நிலை திடக்கழிவு குப்பைகளை சேகரிக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 6819/பி3/2017 நாள் 14.03.2018–ன் படி அனுமதி வழஙகப்பட்டு M/S.Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு,கோரிப்பாளயம்,மதுரை-2. ஒப்பந்த அடிப்படையில் பணி உத்திரவு வழஙகப்பட்டு தற்போது வரை பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் 02.08.2021 வுடன் ஒப்பந்தம் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி 13.03.2021–ந் தேதியுடன் முடிவடைந்ததால் கீழக்கரை நகர் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பதாலும் 99 பணியாளர்களை கொண்டு தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெறவும் பணிகள் மேற்கொள்ள ஆண்டு ஒன்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ 2,40,00,000/– ற்கும் மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் தினக்கூலி பணியாளர்கள் ஊதிய நிர்ணயம் செய்முறை ஆணை உத்திரவு எண் K.Dis/ A3/ 614/ 2020 நாள் 29.07.2020–ன் படி நாள் ஒன்றுக்கு ரூ 449/– வழஙகவும் அதற்கான செலவீனை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(எச்1 /329/2018)

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதார நலன் அவசர அவசியம் கருதி வார்டு 1 முதல் 21 வரையிலான பகுதிகளில் தனியார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

### தீர்மானம் எண்.868அனுமதிக்கப்பட்டது.

## பொருள் :2

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தின் மூலம், தினந்தோறும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது கெரோனா வைரஸ் தாக்குதல் காரணமாக அரசு ஊரடங்கு பிறப்பித்துள்ள நிலையில் இந்நகர் ஏழைய எளிய பொதுமக்கள் மற்றும் ஏர்வாடி தர்காவில் தங்கியிருக்கும் உணவின்றி தவித்து வரும் ஆதரவற்றோருக்கு அம்மா உணவகம் மூலம் உணவு சமைத்து கொடுக்கப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் அம்மா உணவகத்தில் பாய்லர் மற்றும் அடுப்பு பழுதடைந்த காரணத்தால் பொதுமக்களுக்கு உணவு சமைத்து கொடுப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து, அவற்றை சரி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே, அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு உணவு வழங்குவதில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பாய்லர் மற்றும் அடுப்பு பழுதடைந்துள்ளதை சரி செய்வதற்கு இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் Nodal Officer மூலம் ரூ.9490/– செலவிடப்பட்டதற்கு கீழ்காணும் விவரப்படி பட்டியல் தொகைகள் வழங்குமாறு இந்நகராட்சி பொதுப் பணிமேற்பார்வையாளர் மற்றும் அம்மா உணவக பொறுப்பு அலுவலர் (Nodal Officer) திரு.ஆர். சிவசங்கர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

1) Aathik Agencies 11.06.2021–ந் தேதிய பட்டியல் – ரூ. 4920/–

2) Aathik Agencies 14.06.2021–ந் தேதிய பட்டியல் – ரூ. 4570/–

மேற்காணும் விவரப்படியான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.187/2020/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1) நிர்வாக நலனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் ரூ.9490/–யை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.869 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

இந்நகராட்சி Mahindra BOLERO LX 2WD 7STR BS3 ஈப்பு வாகனம் TN65 S 4101-ல் கிரௌன்பாக்ஸ், 4 வீல் என்ட்செட், 4 வீல் பேரிங் (இன்னர் மற்றும் அவுட்டர்), சஸ்பென்சர் வேலை, ஹெட் லைட் செட் புதியது (வயரிங் வேலை) சீட் கவர்ஸ், ரேடியேட்டர் புதியது, பம்ப் நாசில், ஏசி கம்ப்ரசர், இன்ஜின் ஆயில், கிரௌன் ஆயில், கியர் ஆயில், கேன்ட் பிரேக் லிவர், 5 டோர் லாக் வேலை, கூல் அன்ட் ஆயில், செல்ப் மோட்டார் (புதியது), டைனமோ (புதியது), பேட்டரி (புதியது), வைப்பர் செட் (புதியது) மற்றும் ஹாரன் செட் (புதியது) ஆகியவை பழுதடைந்துள்ளதை சரி செய்து தருமாறு 10.06.2021–ந் தேதி இவ்வலுவலக ஈப்பு ஓட்டுநரால் (பொ) அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு, வாகனம் வாங்கிய நிறுவனத்திலேயே (மகேந்திரா சர்வீஸ் சென்டர்) வண்டியை பழுது நீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடருமாறு இந்நகராட்சிப் பொறியாளரால் 11.06.2021–ந் தேதி அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி, மேற்காணும் ஈப்பு வாகனத்தினை மகேந்திரா சர்வீஸ் சென்டர் நிறுவனத்தில் பழுது நீக்கம் செய்யும் பொருட்டு, மகேந்திரா நிறுவனம் விலாங்குடிக்கு நேரில் சென்று பழுதுநீக்க மதிப்பீடுகள் / விலைப்புள்ளிகள் நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்கள் மூலம் கோரப்பட்டது. ஆனால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் அதிக அளவு பழுதுநீக்கம் செய்ய வேண்டிய வாகனங்கள் இருப்பதால் உடனடியாக செய்து தர இயலாது எனவும், 45 தினங்களுக்கு மேல் ஆகும் எனவும் தெரிவித்தனர்.

தற்போது கோவிட்–19 தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும், கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு, ஈப்பு வாகனம் அவசியமாக உள்ளதால், மேற்கண்ட மகேந்திரா நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்ட மற்றொரு நிறுவனமான நந்தவனப்பட்டி, திண்டுக்கல் நிறுவனத்தில் நேரில் சென்று பழுதுநீக்க மதிப்பீடுகள் / விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதற்கு பழுதுநீக்கம் செய்ய வேண்டிய வாகனத்துடன், பழுதுநீக்க மதிப்பீடுகள் / விலைப்புள்ளிகள் கோரிய கடிதம் வழங்குமாறு திண்டுக்கல் நந்தவனப்பட்டி மகேந்திரா நிறுவனத்தால் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக, இந்நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களின் 11.06.2021–ந் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நகராட்சி TN65 S4101 ஈப்பு வாகனம் திண்டுக்கல், நந்தவனப்பட்டி மகேந்திரா நிறுவனத்தில் பழுது நீக்கம் செய்வதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டும், உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**<u>(கோப்பு எண். 284/2021/இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. தற்போது கோவிட்–19 தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ளதாலும், கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் வாகனத்தின் அவசிய அவசரத்தினை கருதி TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கு திண்டுக்கல், நந்தவனப்பட்டி மகேந்திரா நிறுவனத்தில் பழுதுநீக்க மதிப்பீடுகள் / விலைப்புள்ளிகள் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.870 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :4</u>**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பர பலகை ஒவ்வொரு உள்ளாட்சி துறை அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 5966/2021/எம்1, நாள். 09.03.2021–ல் அறிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி வளாகத்தில் 3' x 2' உள்ளாட்சி முறைமன்றம் குறித்த விவர அறிவிப்பு பலகை (Flex Board) இரும்பு பிரேம் செய்து பலகை நிறுவி கொடுக்க பொருட்கள் மற்றும் வேலைக்கூலி உட்பட உத்தேச செலவினம் ரூ.700/– ஆகும். மேற்கண்ட பணியின் அவசியம் கருதி உடனடியாக அறிவிப்பு பலகை நிறுவ நகராட்சி நிர்வாக ஆணையர் உத்தரவிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட பணியினை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1970 பிரிவு 15–ன் கீழ் செலவினங்கள் மேற்கொள்ள இவ்வலுவலக நகரமைப்பு ஆய்வாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்காணும் பணிகள் செய்து கொடுப்பதற்குரிய விலைப்புள்ளிகள் பெற்று அதனடிப்படையில் RS டிசைன்ஸ், டிஜிட்டல் பிளக்ஸ் அன்ட் ஆப்செட் பிரிண்டர்ஸ், என்ற நிறுவனம் மூலம் அறிவிப்பு பலகை இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல் தொகை பில் நம்பர் 1997, நாள். 30.03.2021–ன்படி ரூ.700/– மட்டும் செலவினங்கள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>(கோப்பு எண். 170/2021/சி1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.871அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–எம். பூபதி,**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**